## 15

# உங்களுக்குத் தவறு செய்யப்பட்டிருக்கும் போது சரியானதைச் செய்தல் [5:7–12]

என்னைச் சுற்றிலும் உள்ளவர்கள் அனேகமாக என்னைப் பற்றிய சில விஷயங்களை உற்றுக் கவனித்திருக்கலாம்: நான் விமர்சிக்கப்பட விரும்புவதில்லை! நான் தவறாயிருக்கிறேன், அதாவது நான் சில விஷயங்களில் தவறியிருக்கிறேன் அல்லது எனது முயற்சிகள் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளன என்று கூறப்படுவதை நான் விரும்புவதில்லை. மக்கள் எனக்கு அருகாகச் சாய்ந்து, "*கட்டியெழுப்பும்* விமர்சனம் ஒருசிறிதை நீங்கள் மதிப்பீர்கள் என்று நான் நம்பிக்கையாக இருக்கிறேன்" என்று இரகசியக் குரலில் கூறுவார்கள். நான் அதை மதிக்கலாம், ஆனால் நான் அதை விரும்புவதில்லை! அது கட்டியெழுப்புகிறதோ அல்லது இல்லையோ, இன்னமும் அது விமர்சனமாகவே உள்ளது. நான் நிலைகுலைவு அடைவதை நீங்கள் பார்க்க விரும்பினால், விமர்சனத்திற்கு நான் பாத்திரனாக இருக்கிறேன் என்று நம்பச்செய்யுங்கள். ஓ! அது உண்மையிலேயே உள்ளாகக் கொதிக்கச் செய்கிறது.

பிரச்சனை என்பது நம் யாவருக்கும் பொதுவான விஷயமாக உள்ளது. அது வலுவற்ற மனிதத் தன்முனைப்பாக உள்ளது. பழைய கூற்று ஒன்றின் பொழிப்புரையைப் பயன்படுத்துவது என்றால், "நான் சூதாடும் மனிதனாக இருந்தால், நான் ஒருவன் மாத்திரமே அவ்வாறு உணர்ந்து இருப்பவனல்ல என்று நான் பந்தயம் கட்டுவேன்." அந்த உணர்வுகளும் உணர்ச்சிப் பூர்வமான நிலைகளும், நூற்றுக்கணக்கான பாடல்கள், திரைப்படங்கள், தொலக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் புத்தகங்கள் ஆகியவற்றின் அடிப்படையாக இருந்துள்ளன.

நமது புண்படுதல்கள் எல்லாமும் விமர்சனத்தில் இருந்து வருவதில்லை என்பதை நாம் யாவரும் உணர்ந்து அறிகிறோம்; அவைகள், சகிப்புத்தன்மை யற்ற பணிச்சூழ்நிலை, வீடுசார்ந்த (திருமணம் சார்ந்த அல்லது பெற்றோர் சார்ந்த) போராட்டங்கள், அல்லது ஒரு நண்பரால் செய்யப்பட்ட தவறு போன்ற பல்வேறு இடங்களில் இருந்து வரக்கூடும். யாக்கோபு 5ன் சந்தர்ப்பப் பொருளில், இந்தக் கிறிஸ்தவர்கள் சகித்துக் கொண்டிருந்த வேதனை தவறாக நடத்தப்படுதலும், அவர்கள் செல்வந்தர்களின் கைகளில் தவறாக பயன்படுத்தப்படுதலாக இருந்தன என்பது தெளிவாகக் காணப்படும். செல்வந்தர்களின் (ஆஸ்திகளைக் குவித்து வைத்தல், கூலிகளைக் கொடுக்கத் தவறுதல் மற்றும் நீதிமானை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தல், 5:1-6 என்ற) பாவங்களை நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கும்போது, அவர்கள் (அந்த ஏழைகள்) எவ்வாறு கசப்பினாலும் பழிவாங்குதலின் உணர்வினாலும் நிறைந்திருக்கக்கூடும் என்று காண்பது கடினமாக இருப்பதில்லை. அவர்களின்

*ஜெபங்கள், வெளிப்படுத்தின விசேஷம் 6:10ல் பலிபீடத்தின் கீழிருந்து பரிசுத்தவான்கள் கதறியதைப் போன்று ஒலித்திருக்கலாம்: "பரிசுத்தமும் சத்தி யமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்?"*

*ஆனால் தேவன், கசப்புணர்வு மற்றும் எதிர்த்துத் தாக்குதல் என்பவற்றைக் காட்டிலும் அதிகம் சிறந்த கருத்து ஒன்றைக் கொண்டிருக்கிறார், மற்றும் அந்த மாற்றுக்கருத்தை யாக்கோபு வெளிப்படுத்த இருக்கிறார். உலகம் தவறு செய்திருக்கும்போது, விசுவாசமானது உலகத்தில் இருந்து வேறுபட்ட வகையில் செயல்படுவது எவ்வாறு என்று யாக்கோபு காண்பிப்பார். யாக்கோபு முன்வைக்கும் அறிவுரை, நான்கு கட்டளைகளின் வடிவத்தில் தரப்பட்டுள்ளது. முதல் இரண்டு கட்டளைகள் நேர்மறையானவைகளும் எஞ்சிய இரண்டும் எதிர் மறையானவைகளுமாக உள்ளன.*

## *"பொறுமையாயிருங்கள்" (5:7)*

*முதல் கட்டளை 7ம் வசனத்தில் காணப்படுகிறது: "இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்." இந்தத் தனிநபர்களை "பொறுமையாயிருக்க வேண்டும்" என்று கூறுவதில், யாக்கோபு இரண்டு கிரேக்க வார்த்தைகளின் ஒன்றிணைவில் இருந்து வருகிற ஒரு வார்த்தையைப் பயன்படுத்துகிறார். முதல் வார்த்தை "தூரமான, தொலைவான, நீண்ட" என்று அர்த்தப்படுகிறது மற்றும் இரண்டாவது வார்த்தை "மன எழுச்சி, தகிப்பு, சீற்றம், கோபம்" என்று அர்த்தப்படுகிறது. இவ்விரு வார்த்தைகள் ஒன்றாக இணைந்து "நீண்டகாலம்-உணர்வைக்கட்டுப்படுத்தி இருத்தல்" என்ற சிந்தனையை உண்டாக்குகின்றன.*

*இது யாக்கோபுவின் நாட்களில் பல கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கக் குறைவுபட்டிருந்த ஒரு பண்பாக இருந்ததோ என்ற இரகசியமான சந்தேகம் எனக்கு உள்ளது. அனேகமாக, வேதனை நிறைந்த வகையில் நாம் உண்மை நிறைந்தவர்களாக இருக்க வேண்டுமென்றால், நம்மில் பலர் அதே பண்புடன் போராடுகிறோம். பல கிறிஸ்தவர்கள், "ஓ கர்த்தாவே, எனக்குப்பொறுமையைத் தாரும், மற்றும் அதை எனக்கு இப்போதே தாரும்!" என்று ஜெபித்த மனிதரைப் போல் உள்ளனர். இது, நம்மை யாரேனும் ஒருவர் நிந்திக்கும்போது அல்லது நம்மைப் பற்றிச் சில பொய்களைப் பரப்பும்போது விசேஷித்த வகையில் உண்மையாக உள்ளது. "கலக்கம் கொள்ளாதே. பழிவாங்கு" என்ற பழைய கூற்றை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கலக்கம் கொள்ளுதல் <u>மற்றும்</u> பழிவாங்குதல் என்பதே வழக்க மாக நாம் விரும்புவதாக உள்ளது. நாம் இவ்வாறு இருக்கும்போது, நமது உணர்வுகள் நேராக்கப்படும் வரையிலும், முழு உலகமும் ஒரு நிறுத்தத்திற்கு வருகிறது. இவைகளே மிகச்சரியாக, யாக்கோபு நீக்கிப்போட முயற்சி செய்கிற உணர்வுகள் மற்றும் செயல்பாடுகளாக உள்ளன.*

*இந்தக் கருத்து, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும் பொறுமை யாகக் காத்திருக்கும் விவசாயி பற்றிய விவரித்தலைக் கொண்டு மறுவலியூட்டப்பட்டுள்ளது. மேற்கு டெக்ஸாஸில் ஐந்தரை ஆண்டுகாலம்*

நான் ஊழியம் செய்ததில், பருத்தி விவசாயிகளின் பொறுமையை நான் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு, மண்ணை ஆயத்தப்படுத்த முன்மாரியும் பயிர் பக்குவம் அடையப் பின்மாரியும் தேவையாயிருந்தன. மிக அதிகமான முன்மாரி பயிரிடுதலைத் தாமதப்படுத்தும் அல்லது மிக அதிகமான பின்மாரி அறுவடைக்குத் தடையாயிருக்கும் என்ற அபாயமும் உள்ளது. பருத்தி விவசாயிகளுக்கு பொறுமை (மற்றும் விசுவாசம்) இல்லையென்றால் அவர்கள் உயிர்வாழ இயலாதிருந்தது.

"கர்த்தரின் வருகை" வருமளவும் நாம் பொறுமையாயிருக்க வேண்டும் என்று யாக்கோபு கூறுகிறார். *Parousia* என்பதே கர்த்தரின் "வருகை" என்ற வார்த்தைக்குப் பின்னால் உள்ள கருத்தாகும். ரோம மாகாணங்களில், மிகவும் அடிக்கடி, அரச அதிகாரியொருவர் நகரங்களுக்கும் புறக்காவல் எல்லைகளுக்கும் வருவார். அவர் வந்து சேரும்போது, பணம், சொத்து, முதலியன சம்பந்தமாகப் பிறருக்கெதிராக முறையீடுகள் கொண்டுள்ள யாவரும், அவருக்கு முன்பாக வருவார்கள். அந்த வேளையில், எல்லாத் தவறுகளும் நேராக்கப்படும். இது *parousia* என்று அழைக்கப்பட்டது. இயேசு தமது *parousia*ல் திரும்புகிறபோது, ஆவிக்குரிய தவறுகள் யாவும் நேராக்கப்படும் (2 தெசலோனிக்கேயர் 1:6, 7). தவறாக நடத்தப்பட்டுக்கொண்டுள்ள கிறிஸ்தவர்கள் அதுவரையில் "பொறுமையாயிருக்க" வேண்டும்.

## "ஸ்திரப்படுத்துங்கள்" (5:8)

சகோதரர்களுக்கு யாக்கோபு புத்திகூறுகிறபோது, "ஸ்திரப்படுத்துங்கள்" என்பது 8ம் வசனத்தில் காணப்படுகிற இரண்டாவது கட்டளையாக உள்ளது. விஷயங்கள் தவறாகச் செல்கிறபோது, நம்பிக்கையிழந்து போகுதல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது. சில வேளைகளில் நமது விசுவாசம், நம்மைச் சுற்றி நடப்பவைகளாக, நம்மிடத்தில் மக்கள் கூறுபவைகள் அல்லது நம்மை மக்கள் எவ்வாறு நடத்துகின்றனர் என்பவற்றைச் சார்ந்துள்ளது. நாம் நியாயமற்ற வகையில் நடத்தப்படும்போது, நமது விசுவாசத்தின் பலம் அடிக்கடி பலவீனம் அடைகிறது. ஆனால் நமது விசுவாசம் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது என்று யாக்கோபு கூறுகிறார். உண்மையில், "ஸ்திரப்படுத்துங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகள், "உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள்" என்று நேரடியாக அர்த்தப்படுகின்றன. நமது விசுவாசமானது, தவறாக நடத்தப்படுதலை நாம் சகித்துக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கும்படிக்கு நமது இருதயங்களை ஸ்திரப்படுத்தும், பெலத்தப்படுத்தும்.

நாம் "ஸ்திரப்படும்படிக்கும்" யாக்கோபு, "கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" என்ற ஒரு தகுதிக் கூற்றைக் கூடுதலாகக் கூறுகிறார். இதைப்போன்ற கூற்றுக்களைப் புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கும்போது, அடிக்கடி நமது தோள்ளைக் குலுக்கிக் கொண்டு, "ஓ, நல்லது, கால உருவகத்திற்கான கர்த்தரின் வழியில் அது இன்னமும் சமீபமாக உள்ளது" என்று கூறுகிறோம். ஆனால் புதிய ஏற்பாட்டின் கிறிஸ்தவர்கள், இயேசுவின் உடனடி வருகையைப் பற்றிப் பிரசங்கித்தனர் மற்றும் அவர் எந்த வேளையிலும் திரும்பிவரக் கூடும் என்பது போன்று வாழ்ந்தனர். இன்றைய நாட்களில் உள்ள கிறிஸ்தவர்கள் அதே வகையில் வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம். இயேசு எந்த வேளையிலும் திரும்பிவரக்கூடும் என்ற வகையில் நாம் வாழ்ந்தால்,

*எதிர்ப்பின் வேளையின்போது "ஸ்திரப்பட்டு நிற்குதல்" என்பது கடினமானதாக இருக்காது.*

## *"முறையிடாதிருங்கள்" (5:9)*

*9ம் வசனத்தில் மூன்றாவது புத்திமதியும் எதிர்க்கூற்றுகளில் முதலாவது ஆனதும் உள்ளது: "சகோதரரே, ... ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடா திருங்கள்." அந்த ஒன்றுடன் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இடத்தில் யாக்கோபு நம்மை இடித்துரைக்கிறார்! நமது வழியில் எதிர்ப்பு வருகிறபோது, குறிப்பாக, நம்மைச் சுற்றிலும் உள்ளவர்களிடமிருந்து, அதிலும் குறிப்பாக நமது கிறிஸ்தவ சகோதரர்களிடமிருந்து தவறாக நடத்தப்படுதல் வரும்போது, முறுமுறுத்தல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது. அவர்கள் எவ்வாறு நம்மை நடத்த வேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ, அவ்வாறு அவர்கள் நடத்தாது இருப்பதன் பொல்லாத குணங்கள் யாவற்றையம் பட்டியலிட்டு, நமது வேதனை நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களிடத்தில் குரலாக்கப்படுகிறது.*

*நாம், முறுமுறுக்கிற, முணுமுணுக்கிற மற்றும் முறையிடுகிற சபை உறுப்பினரை மன்னித்துவிடும் மனப்பாங்கைக் கொண்டிருக்கிறோம். நாம், "அவர் அவ்வாறுதான் இருக்கிறார்" அல்லது "அவர் ஒரு எதிர்மறை ஆளுமைத்தன்மை கொண்டிருக்கிறார்" என்பது போன்ற அற்பமான குறிப்புகளை அளிக்கிறோம். முறுமுறுக்கிற அல்லது தனக்குச் சலுகை எடுத்துக்கொள்ளும் ஒருவரை, அவரது முறுமுறுத்தல் ஒரு பொருட்டல்ல என்பது போல நாம் மன்னித்து விடுகிறோம் என்பதே பிரச்சனையாக உள்ளது. இந்தக் குற்றங்கள் குறிப்பிடத்தக்கவையல்ல என்பது போலத் தேவன் இவற்றைக் கண்ணோக்குவதில்லை. நீங்கள் தவறாக நடத்தப்படும்போது கூட, உங்கள் விசுவாசமானது, நீங்கள் உங்கள் சகோதரருக்கு எதிராக முறுமுறுத்தலில் இருந்து உங்களைப் பாதுகாக்கும் என்று தேவன் கூறுகிறார். பொல்லாத வகையில் பேசும் இச்செயலைத் தேவன் செய்கிறது போலத் தீவிரமாக நாம் எடுத்துக் கொள்ளாத வரையில், சபைகள் பாவம் நிறைந்த வகையில் பேசும் உறுப்பினர்களால் அழிக்கப்படும்.*

*முறுமுறுக்காது இருத்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காகப் பரிசுத்த ஆவியானவர், அதைச் செய்பவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்று யாக்கோபு மூலமாக எச்சரிக்கிறார். "நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்" என்பதால், முறுமுறுப்பவர்களுக்கு எதிரான நியாயத்தீர்ப்பு உடனடியாக உள்ளது. நாம் ஒருவர் மற்றவருக்கு எதிராக முறுமுறுத்தல் காரணமாக இயேசுவை நாம் நியாயாதிபதியாகக் கொண்டிருத்தல் என்பது எவ்வளவு பயங்கரமாக இருக்கும்!*

## *"ஆணையிடாதீர்கள்" (5:12)*

*நமது விசுவாசமானது, நாம் பேசும் வகைமுறையில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த வேண்டும் என்று யாக்கோபு கூறுகிறார். நாம் ஆணையிடக்கூடாது என்று அவர் கூறுகிறார் (5:12). மக்கள் நம்மைத் தவறாகத் தூண்டும்போது நமது நாவுகள் கட்டுக்கடங்காமல் ஓட அனுமதித்தல் மிகவும் சுலபமாக இருக்கும். நமது உலகம் எவ்வளவு ஆபாசமானதாக உள்ளது என்று உணர்ந்து அறிவதற்கு நீங்கள் உலகத்தின் மக்களுடன் நேரம் மாத்திரமே செலவிட வேண்டியுள்ளது.*

நமது விசுவாசம் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தும் போது மிகமோசமான சூழ்நிலைகளில் நாம் நமது நாவுகளைக் கட்டுப்படுத்த முடியும்.

நமது சமூகத்தில் அவ்வளவு பொல்லாங்கானதும் அவ்வளவு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுமான விஷயமான ஆயாசம் என்பது கிறிஸ்தவர்களுக்குக் கண்ணியாகவும் வலையாகவும் உள்ளது. ஆனால் நமது பேச்சானது எளிமையாகவும் தெளிவாகவும் இருக்கவேண்டும், அது உலகத்தின் உவர்ப்பான பேச்சினால் அடைமொழிப் படுத்தப்பட்டதாக இருக்கக் கூடாது என்று யாக்கோபு கூறுகிறார். கிறிஸ்தவர்கள் தாங்கள் விசுவாசிக்கும் விஷயத்தை மறுதலிப்பதற்குத் தங்கள் மொழிநடையைப் பயன்படுத்துகிற போது, அது பரிதாபகரமானதாக உள்ளது. விஷயங்கள் கடினமானவைகளாக இருக்கும்போதும் கூட, நாம் என்ன கூறுகிறோம் என்பதில் நமது விசுவாசம் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தும்.

## முடிவுரை

நாம் கர்த்தரால் அழைக்கப்பட்டுள்ளபோது, நாம் ரோஜாக்களின் படுக்கையில் படுத்துக்கொள்வதற்காக அவர் நம்மை அழைப்பதில்லை. கிறிஸ்தவ வாழ்வை வாழுதல் என்பது கடினமாக உள்ளது. குறிப்பாக இது, நம்மைச் சரியாக நடத்த வேண்டியவர்களால் நாம் தவறாக நடத்தப்படும்போது மிகவும் கடினமாக உள்ளது. நம்மை அன்புகூர வேண்டியவர்களால் நாம் தவறாக நடத்தப்படும் போது, நாம் (1) பொறுமையாயிருத்தல், (2) ஸ்திரப்பட்டு நிற்குதல், (3) முறையிடாதிருத்தல் மற்றும் (4) ஆணையிடாதிருத்தல் ஆகியவற்றை நினைவுகூருதல் அவசியமாக உள்ளது.

நமக்கு நம்பிக்கை தரப்படுவதற்காக, பாடுகளின் முகத்தில் பொறுமையாக இருந்துள்ள மக்களின் உதாரணங்கள் நமக்கு தரப்பட்டுள்ளன. முதலாவது, தீர்க்கதரிசிகளைப் பற்றி ஆழந்து சிந்திக்கும்படி நமக்கும் கூறப்பட்டுள்ளது. எலியா, ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் மற்றும் ஓசியா ஆகியோர் எதிர்கொண்ட எதிர்ப்பான சூழ்நிலைகள் மற்றும் அவர்கள் காட்சிப்படுத்திய பொறுமை ஆகியவற்றைப் பற்றி நினைத்துப் பாருங்கள். யோபுவின் பொறுமையைப் பற்றி ஆழந்து சிந்திக்கும்படியும் யாக்கோபு கூறுகிறார். எனது கருத்தில், இவ்விடத்தில் மற்ற வேதாகமங்கள் "பொறுமை" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகையில், அவற்றைவிடச் சிறப்பாக NIV வேதாகமம், "நீடியபொறுமை" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது, ஏனென்றால் சில வேளைகளில் யோபு பொறுமையின் வடிவமாகவே இருந்தார். எது நடந்தபோதிலும் யோபு நீடிய பொறுமையாக இருந்தார். இந்த உதாரணங்கள் நமக்கு நம்பிக்கை நிறைந்தவையாக உள்ளன, ஏனென்றால் இவைகள் அது செய்யப்பட முடியும் என்று நமக்குக் காண்பிக்கின்றன.

விஷயங்கள் தவறாகச் செல்லும்போது நமது விசுவாசம் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த அனுமதிப்பதற்குத் தேவன் நமக்குப் பெலன் கொடுப்பாராக.